



මැතිවරණ කොමිෂන් සභාව
12 JAN 2026
නීති අංශය
රාජගිරිය

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
# (அரசியல் பிரிவு)

## யாப்பும் மற்றும் விதிகளும்

**பதிவு எண். EC/RPP/001/05**

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் யாப்பு
# அரசியல் பிரிவு

---------------------------

**விதி 01 - கட்சியின் பெயர், பதிவு செய்யப்பட்ட அலுவலகம் & அங்கீகரிக்கப்பட்ட சின்னம்**

i. <u>கட்சியின் பெயர்</u> : (இனிமேல் கட்சி என்று குறிப்பிடப்படும்) இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியல் பிரிவு)

ii. பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி : சௌமிய பவன், இல.72,ஆனந்த குமாரசாமி மாவத்தை, கொழும்பு 07 அல்லது நிர்வாக சபையால் அவ்வப்போது தீர்மானிக்கும் வேறு இடத்தில்

iii. அங்கீகரிக்கப்பட்ட சின்னம் - சேவல்

**விதி 02 - கொள்கைகள்**

கட்சியின் கொள்கைகள் பின்வருமாறு :

i. எந்தவொரு பிரசையும் குறிப்பாக மலையகம், விவசாயம், முறைசாரா, புலம் பெயர்ந்தோர், வீட்டுப்பணி மற்றும் இதர துறைகளைச் சார்ந்தவர்களை இலங்கையை கட்டியெழுப்பவும், ஜனநாயக கொள்கைகளை ஊக்குவிக்கும் வகையில் கட்சியில் இணைக்க ஒழுங்கமைத்தல்.

ii. அரசியல், பொருளாதார, கல்வி, சமூக மற்றும் கலாச்சார ரீதியாக பின்தங்கிய பிரசைகள் விசேடமாக மலையக சமூகத்தினரை தேசிய நீரோட்டத்தில் விரைவாக நுழைவதற்கான வாய்ப்புகளை ஊக்குவித்தல்.

iii. நீதித்துறை மன்றங்கள் உட்பட அனைத்து மன்றங்களிலும் குறிப்பாக மலையக தொழிலாளர்களின் நலனுக்காக நியாயமான ஊதியம், வீட்டு வசதி, காணி,அரசியல்,பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஆதரவளித்தல்.

iv. தொழில்துறையிலும் மற்றும் சமூகத்திலும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் அந்தஸ்தை மேம்படுத்தல்.

v. மனித ஆளுமையின் முழு வளர்ச்சியையும் தடைகள் இல்லாமல் வளர்க்கும் ஒரு சமூக அமைப்பை நிறுவுதல், சமூக அல்லது பொருளாதார பாகுபாடு மற்றும் சுரண்டலை நீக்குதல், எந்த வடிவத்திலும் சமூக விரோத அதிகாரக் குவிப்பை ஒழித்தல்.

vi. கொள்கைகளை விரைவாக நிறைவேற்றுவதற்காக தொழில்துறையை பொது அல்லது தொழிலாளர் உடைமையின் கீழ் பொருத்தமான வடிவத்தில் அமைத்தல்.

vii. முழு வேலைவாய்ப்பு மற்றும் அதன் மனிதவளம் மற்றும் பிற வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தும் வகையில் சமூகத்தை ஒழுங்குபடுத்தல்.

viii. தொழில்துறை நிர்வாகத்தில் தொழிலாளர்களின் இணைப்பை அதிகரிப்பதையும் அதன் கட்டுப்பாட்டில் அவர்களின் முழு பங்கேற்பையும் உறுதி செய்தல்.

ix. இனம், சாதி. கோட்பாடு, மதம் அல்லது பாலினம் சார்ந்த அனைத்து பாகுபாடுகளையும் நீக்க பாடுபடுதல்.

x. அரசியல், வேலைவாய்ப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் மற்றும் வசதிகளை ஊக்குவித்தல். மற்றும் அவர்களின் வளர்ச்சியில் உள்ள சட்டரீதியான, சட்டத்திற்குப் புறம்பான தடைகளை நீக்குவதற்கு பாடுபடுதல்.

xi. இந்த யாப்பின் கடைசியில் காணப்படும் ஒப்பந்தத்தில் (இணைப்பு - அ) கையெழுத்திடும் வேட்பாளர்களை பாராளுமன்றம், மாகாண சபைகள், மாநகராட்சி மன்றங்கள், நகர சபைகள், பிரதேச சபைகள் அல்லது வேறு ஏதேனும் உள்ளூராட்சி அல்லது சட்டபூர்வ அமைப்புகளின் தேர்தல்களில் ஆதரித்தல்.

xii. மேலே குறிப்பிட்டுள்ள கொள்கைகளை அடைய அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு அரசியல் கட்சியுடனும் கூட்டணி அமைத்தல்.

## விதி 03 – கட்சியின் ஒழுங்கமைத்தல்

கட்சி பின்வருவன கொண்டு அமைந்திருக்கும்.

அ. முதன்மை அங்கத்தினர்கள் (Primary Members) : அவர்களின் குடியிருப்புகளுக்கு ஏற்ப வகைப்பட்டிருக்கும்.

ஆ. முதன்மைக் குழு (தோட்டக் கமிட்டி, கிராமக் கமிட்டி, வார்டு கமிட்டி, நகர கமிட்டி) : அங்கத்தினர்களாலேயே தெரிவு செய்யப்பட்டவர்கள்.

இ. பிரதிநிதிகள் (டெலிகேட்) : ஐம்பது (50) உறுப்பினர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் முதன்மை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் (டெலிகேட்) : அவர்களில் நாற்பது சதவீதம் (40%) பெண்களாக இருக்க வேண்டும்.

ஈ. <u>பிராந்தியக் குழுக்கள்</u> :

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பிராந்தியக் குழுக்கள். அத்தகைய பிராந்தியங்கள் எங்கு அமைக்கப்பட்டாலும் மாவட்டக் குழுக்களின் தலைவர்கள், மாவட்ட மகளிர் மற்றும் இளைஞர் குழுக்களின் தலைவி /தலைவர்கள், பிராந்தியத்தில் உள்ள அலுவலகங்களின் ஊழியர்கள், மகளிர் ஒருங்கிணைப்பாளர்கள், அரசியல் அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பிராந்தியத்தின் உதவிச் செயலாளர்கள் ஆகியோர் அலுவலக பொறுப்பாளர்களாக (Office Bearers) இருப்பார்கள். பிராந்திய குழு பிராந்தியத்தின் உப தலைவரால் தலைமை தாங்கப்படும். சம்பந்தப்பட்ட உபதலைவர் , செயலாளரால் பெயரிடப்பட்ட வேறு எந்த நபரையும் பிராந்தியக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைக்கலாம். தேவை ஏற்படின் செயலாளருக்குத் தகவல் அனுப்பலாம்.

## விதி 04 – உறுப்பினர்

அ. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அனைத்து உறுப்பினர்களும் தானாகவே கட்சியின் உறுப்பினர்களாக கருதப்படுவார்கள்.

ஆ. 18 வயதுக்கு மேற்பட்ட இரு பாலினத்தைச் சேர்ந்த அனைத்து பிரசைகளும் கட்சியின் உறுப்பினர் பதவியைப் பெறுவதற்கான உரிமையும் வாய்ப்பையும் பெறுவார்கள். பாடசாலை மாணவ மாணவிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படமாட்டார்கள். இருப்பினும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் நிர்வாகக் குழுவின் ஒப்புதலுடன் சேர்க்கப்படலாம்.

இ. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் அல்லாத பிற பிரசைகளின் உறுப்பினர் பதவிக்கான விண்ணப்பம் எழுத்து பூர்வமாகவும் நிர்வாக சபையால் பரிந்துரைக்கப்படும் விதி மற்றும் படிவத்தின்படியும் இருத்தல் வேண்டும்.

ஈ. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் அல்லாத பிற உறுப்பினருக்கான உறுப்பினர் கட்டணம் ஒரு வருடத்திற்கு ரூபா ஆயிரம் (ரூபா 1000/-) ஆகும்.

உ. நிர்வாக சபையால் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் விண்ணப்பதாரர் கட்சியின் உறப்பினராகச் சேர்க்கப்பட்டு, செயலாளரால் உறுப்பினர் அட்டை வழங்கப்படுவார்.

ஊ. கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து விலக விரும்பும் எந்தவொரு உறுப்பினரும் செயலாளருக்கு எழுத்து மூலமாக மூன்று (03) காலண்டர் மாத அறிவிப்பை வழங்க வேண்டும்.

எ. கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் எந்தவொரு உறுப்பினரும் கட்சியின் அங்கத்துவத்தில் இருந்து நீங்கிவிடுவார். அத்துடன் அத்தகைய அறிவிப்பு நாளிலிருந்து உறுப்பினர் பதவிக்கான அனைத்து உரிமைகளையும் இழப்பார்.

ஏ. கட்சியின் உறுப்பினராக இருந்து விலகிய எந்தவொரு உறுப்பினரும், செயலாளருக்கு எழுத்து பூர்வமாக விண்ணப்பித்து நிர்வாக சபையால் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் அங்கீகரிக்கப்பட்டால் மீண்டும் கட்சியின் உறுப்பினராக சேர்க்கப்படலாம்.

**விதி 05 – கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து இடைநீக்கம், வெளியேற்றம், நீக்கம் மற்றும் மேல்முறையீடு.**

அ. எந்த உறுப்பினராவது கட்சியின் விதி மற்றும் விதிமுறைகளை மீறியதாக முதல் பார்வையிலே ஆதாரம் இருப்பதாக செயலாளர் தீர்மானித்தால் அத்தகைய அங்கத்தினரை இடைநீக்கம் செய்ய அதிகாரம் உண்டு. அப்படி இடைநீக்கம் செய்த மூன்று (03) நாட்களுக்குள் நிர்வாகசபைக்கும், ஒழுங்காற்று குழுவிற்கும் செயலாளர் அறிவித்தல் அவசியமாகும்.

ஆ. ஒழுங்காற்று குழுவின் விசாரணைக்குப் பிறகு கட்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்த முயற்சித்ததாகவோ அல்லது விதிகள் மற்றம் விதிமுறைகளுக்கு முரணாகச் செயற்பட்டதாகவோ அல்லது மீறியதாகவோ அல்லது கட்சியின் நற்பெயர் அல்லது நற்மதிப்பிற்கு தீங்கு, களங்கம் விளைவிக்கும் எந்தவொரு செயலையும் செய்ததாகவோ குற்றம் சாட்டப்பட்டு நிரூபிக்கப்பட்ட எந்தவொரு உறுப்பினரையும் வெளியேற்ற நிர்வாக சபைக்கு அதிகாரம் உண்டு.

இ. தேர்தல் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேறு எந்த அரசியல் கட்சியின் பட்டியலில் பரிந்துரைக்கப்பட்டு பாராளுமன்றம், மாகாணசபை அல்லது பிரதேசசபை அல்லது வேறு எந்தவொரு உள்ளூராட்சி அமைப்புக்கு கட்சியின் சார்பாக தெரிவான எந்தவொரு உறுப்பினரும், கட்சியின் புகழ், நற்பெயருக்கு சேதம் விளைவித்திருந்தால் அல்லது நிர்வாகசபை வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கு மீறிச் செயல்பட்டிருந்தால் அவரை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க நிர்வாகசபைக்கு அதிகாரம் உண்டு.

ஈ. வெளியேற்றப்பட்ட எந்தவொரு உறுப்பினரும் வெளியேற்றப்பட்ட பதினான்கு (14) நாட்களுக்குள் தேசியசபையில் மேல்முறையீடு செய்ய உரிமை உண்டு. அத்தகைய மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் வரை நிர்வாகசபை முடிவு அமுலில் இருக்கும். மேல்முறையீடு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) வாரங்களுக்குள் தேசியசபை அதன் முடிவை அறிவிக்க வேண்டும். அத்தகைய முடிவு இறுதியானதும் மற்றும் முடிவானதும் ஆகும்.

## விதி 06 – புத்தகங்களை ஆய்வு செய்தல்

செயலாளருக்கு ஏழு (07) நாட்கள் எழுத்து பூர்வ அறிவிப்பு வழங்கப்பட்டால் ஆர்வமுள்ள எந்தவொரு உறுப்பினருக்கும் உறுப்பினர்களின் பட்டியல் மற்றும் கணக்கு புத்தகங்களை ஆய்வு செய்ய வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.

## விதி 07 – தேசிய மாநாடு

அ. கட்சியின் தேசிய மாநாடு ஒவ்வொரு மூன்று (03) வருடங்களுக்குள் அல்லது அவ்வப்போது தேசியசபையால் அழைக்கப்படும். தேசிய மாநாட்டிற்கான நடப்பெண் (Quorum) மொத்த பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு (2/3) பங்கு ஆக இருக்கும்.

ஆ. தேசிய மாநாட்டில் பிரதிநிதிகள் (Delegates) தேசிய மற்றும் நிர்வாக சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் பதவி காலாவதியாகாத கட்சியின் முன்னாள் தலைவர்கள் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள்.

இ. செயலாளர் தேசிய மாநாட்டுக்கான குறைந்தது முப்பது (30) நாட்கள் அறிவிப்பை விதி (07) (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நபர்களுக்கும் வழங்க வேண்டும். அல்லது தேசிய மாநாட்டிற்கு குறைந்தது மூன்று (03) வாரங்களுக்கு முன்னதாக பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டும்.

ஈ. தேசிய மாநாட்டில் எடுக்கப்போகும் தீர்மானம் மற்றும் விதிகளைத் திருத்துவதற்கான அறிவிப்பு ஆகியவை அங்கத்தினர்களால் தேசிய மாநாட்டுக்கு குறைந்தது பதினைந்து (15) நாட்களுக்கு முன்னதாக செயலாளரை அடைய அனுப்பப்படவேண்டும்.

## விதி 08 – சிறப்பு மாநாடு

அ. கட்சியின் சிறப்பு மாநாடு நிர்வாகக்குழுவின் தீர்மானம் அல்லது தேசிய சபையின் தீர்மானம் மூலம் கூட்டப்படும்.

ஆ. ஐந்து (05) மாவட்டக் கமிட்டிகளால் எழுத்துப்பூர்வமாக சிறப்பு மாநாட்டை கூட்ட வேண்டிய காரணங்களைக் குறிப்பிட்டு கூட்டு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அதன் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை கட்சியின் இருபத்தைந்து சதவீதத்திற்கும் குறையாததாக இருந்தால் அத்தகைய வேண்டுகோள் பெறப்பட்ட இருபத்தியொரு (21) நாட்களுக்குள் சிறப்பு மாநாடு கூட்டப்படவேண்டும்.

இ. ஒரு சிறப்பு மாநாட்டிற்கான அறிவிப்பு மற்றும் நிகழ்ச்சி நிரல் விதி (07) (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நபர்களுக்கும் அனுப்பவேண்டும். அல்லது சிறப்பு மாநாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு குறைந்தது ஏழு (07) நாட்களுக்கு முன்னதாக பத்திரிகைகளில் வெளியிடப்படவேண்டும்.

ஈ. ஒரு சிறப்பு மாநாடு அது கூட்டப்பட்ட நிகழ்ச்சி நிரல் விடயங்களையிட்டு மட்டுமே கையாள வேண்டும்.

## விதி 09 - கூட்ட அறிக்கை

அனைத்து கூட்டங்களின் அறிக்கை செயலாளரால் வைக்கப்பட்டு அடுத்த கூட்டத்தில் உறுதிப்படுத்தலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## விதி 10 - வாக்களிப்பு

தலைவர் மாற்று முடிவு செய்யும் சந்தர்ப்பங்களில் தவிர, கட்சியின் அனைத்து கூட்டங்களிலும் வாக்களிப்பது, கைகளை உயர்த்துவதன் மூலம் மட்டுமாகவே இருக்க வேண்டும். இருப்பினும் வருகை தந்தவர்களில் பெரும்பாலானோர் ஒரு குறிப்பிட்ட வாக்களிப்பு முறைக்கு ஆதரவாக முடிவு செய்தால் அந்த முறையை பின்பற்றப்படலாம்.

**விதி 11 - கட்சியின் சபைகளும் மற்றும் குழுக்களும் பின்வருமாறு அமையும்.**

i. தேசிய சபை
ii. நிர்வாக சபை (Executive Council)
iii. மத்திய குழு
iv. நிர்வாக குழு (Administrative Committee)
v. அலுவலக பொறுப்பாளர்கள் (Office Bearers)
vi. நிதி குழு
vii. ஒழுக்காற்று குழு
viii பிராந்திய குழு
ix மாவட்ட குழு
x. முதன்மை குழு (Primary Committee)

விதி 12

**கட்சியின் துணைக்குழுக்கள்**

அ. i. மகளிர் பிரிவு (மாதர் காங்கிரஸ்)
ii இளைஞர் பிரிவு ( வாலிபர் காங்கிரஸ்)

ஆ. மகளிர் அணி மற்றும் இளைஞர் அணி ஒவ்வொன்றும் செயலாளரின் நேரடி பார்வையின் கீழ் செயல்படும்.

இ. செயலாளரால் நியமிக்கப்படும் மகளிர் அணி மற்றும் இளைஞர் அணிக்கான அலுவலக பொறுப்பாளர்கள் பின்வருமாறு:

i தலைவர்
ii செயலாளர்
iii குழு உறுப்பினர்கள் - 11 (குறைந்தபட்சம்)

## விதி 13 - தேசியசபை

அ. தேசியசபையின் மேலாண்மை மற்றும் வழிகாட்டுதலின்கீழ் கட்சி இயங்கும். இதில் பின்வருவோர் அடங்குவர்.

i போசகர்

ii தலைவர்

iii தவிசாளர்

iv. செயலாளர்

v. நிதிச்செயலாளர்

vi. நிர்வாகச்சபையின் பிரதம சட்ட ஆலோசகர் (பரிந்துரைக்கப்பட்டவர்

vii. பிரதி தலைவர் - 2

viii உப தவிசாளர்

ix பிரதி செயலாளர்

x அரசியல் அமைப்பாளர்

xi உப தலைவர்கள் - 16

xii பிரதி அரசியல் அமைப்பாளர்

xiii உதவி செயலாளர்கள் - 30

xiv பதவியில் உள்ள மாவட்டத் தலைவர்கள்

xv மாவட்ட கமிட்டிகளால் ஒவ்வொரு ஐநூறு (500) உறுப்பினர்களுக்கும் ஒரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

பரிந்துரைக்கப்பட்ட அங்கத்தினர்களைத் தவிர ஏனைய தேசியசபை அங்கத்தினர்கள் அனைவரும் தோந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர்.

## விதி 14 – தேசியசபையின் கடமைகள் மற்றும் செயல்பாடுகள்

அ. தேசிய மாநாட்டில் அல்லது சிறப்பு மாநாட்டில் கட்சி வகுத்த பணிகளின் முன்னேற்றத்தை தேசிய சபை வழிநடத்தும். மேலும், கட்சியின் தேசிய அல்லது சிறப்பு மாநாட்டிற்கு பிறகு எழக்கூடிய அனைத்து புதிய விடயங்களையும் கையாளும்.

ஆ. கட்சியின்தொடர்புடைய அனைத்து விடயங்களையும் ஒழுங்கு படுத்துவதற்காக யாப்புக்கு முரண்பாடு அல்லாத விதிகளை உருவாக்கும் அதிகாரம் தேசிய சபைக்கு உரித்தாகும்.

இ. கட்சியின் தேசிய மாநாடு நடைபெற்ற முப்பது (30) நாட்களுக்குள் தேசிய சபை பின்வரும்

I. அலுவலக பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

i தலைவர்

ii தவிசாளர்

iii செயலாளர்

iv. நிதிச்செயலாளர்

v. நிர்வாகச்சபையின் பிரதம சட்ட ஆலோசகர்

vi. பிரதி தலைவர் - 2

vii. உப தவிசாளர்

viii பிரதி செயலாளர்

ix அரசியல் அமைப்பாளர்

x உப தலைவர்கள் - 16

xi பிரதி அரசியல் அமைப்பாளர்

xii நிர்வாகச் செயலாளர்

xiii பிரதம கணக்காளர்

II. தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து (10) உபதலைவர்களில், பிராந்தியங்களுக்கு எட்டு (08) பேர் மற்றும் பெண்களுக்கு இரண்டு (02) பேர் கொண்டவர்களாக இருப்பார்கள். நான்கு (04) உபதலைவர்கள் நிர்வாகச் சபையுடன் கலந்தாலோசித்து செயலாளரால் முன்மொழியப்படுபவர்களாவர்.

III. அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு ஒதுக்கப்படவேண்டிய விடயம் மற்றும் செயற்பாடுகள் குறித்து நிர்வாக சபையுடன் கலந்தாலோசித்து செயலாளர் தீர்மானிப்பார்.

IV. நிர்வாக சபையின் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய செயலாளரால் ஒரு தகுதி வாய்ந்த பிரதம கணக்காளர் நியமிக்கப்படுவார்.

ஈ. தேசிய சபை (06) மாதங்களுக்கு ஒருமுறையாவது அல்லது நிர்வாகச் சபையால் தேவைப்படும் போதெல்லாம் அல்லது எழுத்து பூர்வ வேண்டுகோளின் பேரில் ஐம்பதுக்கு (50) குறையாத அல்லது (1/5) உறுப்பினர்களால் (எது குறைவோ) செயலாளருக்கு அனுப்பப்படும் வேண்டுகோளின் பேரில் கூட வேண்டும்.

இந்த கோரிக்கை, கூட்டம் எந்த நோக்கத்திற்காக தேவைப்படுகிறது என்பதை குறிப்பிட வேண்டும். அப்படியானால், கோரிக்கை பெறப்பட்டதில் இருந்து இருபத்தொரு (21) நாட்களுக்குள் கூட்டம் கூட்டப்படவேண்டும். அத்தகைய கூட்டத்தில் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தவிர வேறு எந்த விடயமும் பரிசீலனைக்கு கொண்டு வரப்படக்கூடாது.

உ. தேசியசபை கூட்டத்திற்கான நடப்பெண் (quorum) அதன் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்காக (2/3) இருக்க வேண்டும்.

ஊ. அடுத்த தேசிய மாநாட்டின் கூட்டம் வரை தேசியசபை அதன் அதிகாரத்தை கையாளும்.

எ. தேசியசபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட எந்தமுடிவும் அதன் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு (2/3) பேர் அத்தகைய திருத்தம் அல்லது ரத்துக்கு ஒரு சிறப்பு கூட்டத்தில் வாக்களித்தால் தவிர மூன்று (03) மாதங்கள் காலாவதியாகும்வரை திருத்தப்படவோ அல்லது ரத்து செய்யவோ கூடாது.

ஏ. பிரதிநிதிகள் (டெலிகேட்) தேசிய மற்றும் நிர்வாக சபைகளின் உறுப்பினர்கள், அலுவலக பொறுப்பாளர்கள், முன்னாள் தலைவர்கள் மற்றும் பதவி வகிக்கும் மாவட்டத் தலைவர்கள் தொடர்பான அனைத்து அரசியல் தொழிற்சங்க மற்றும் பிற முறைகேடுகளையும் விசாரிக்க செயலாளரால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்று குழுவை தேசிய சபை வழிநடத்தும்.

ஒழுக்காற்று குழு

---------------------------

i தலைவர்

ii தவிசாளர்

iii செயலாளர்

iv. அரசியல் அமைப்பாளர்

v. உப தலைவர் - நிர்வாகம்

vi. பிராந்தியத்திற்கு பொறுப்பான உப தலைவர்

vii. நிர்வாகச்செயலாளர்

ஒழுக்காற்று குழு கூட்டத்திற்கான நடப்பெண் (quorum) ஐந்து (05) உறுப்பினர்கள் ஆகும்.

ஐ குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்கு (2/3) உறுப்பினர்கள் கலந்து கொண்ட தேசியசபை கூட்டத்தில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பேரில் தவிர, தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு அலுவலக பொறுப்பாளர், கணக்காய்வாளர் அல்லது காப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட முடியாது. இரண்டு (2) தேசிய சபை கூட்டங்களுக்கு இடையில் தேவை ஏற்பட்டால், அத்தகைய நபர் அல்லது நபர்களை இடைநீக்கம் செய்யவும் அதன் விளைவாக ஏற்படக்கூடிய காலியிடம் அல்லது காலியிடங்களை நிரப்பவும், தேசிய சபை கூட்டத்தின் மூலம் மேலும் நடவடிக்கை அல்லது ஒப்புதலுக்காக மேற்படி விடயம் அல்லது விடயங்களை கொண்டுவரவும் நிர்வாக சபைக்கு அதிகாரம் உண்டு.

ஒ. தேசிய சபை, செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ் அதன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அதன் செயல்பாடுகளையும் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றும்.

## விதி 15 – நிர்வாகசபை (Executive Council)

அ. கட்சியின் நிர்வாகசபையில் பின்வருவோர் அடங்குவர்.

i போசகர்

ii தலைவர்

iii தவிசாளர்

iv. செயலாளர்

v. நிதிச்செயலாளர்

vi. அரசியல் அமைப்பாளர்

ஆ. நிர்வாக சபையில் ஏற்கனவே பிரதிநிதித்துவப்படுத்தப்படாத உறுப்பினர்களை இணை தேர்வு செய்யும் அதிகாரம் நிர்வாக சபைக்கு இருக்கும். அத்தகைய இணைக்கப்பட்ட உறுப்பினர்கள் சபையின் இருபத்தைந்து சதவீதத்திற்கு (25%) கூடாமல் இருக்க வேண்டும். மேலும் அத்தகைய இணை தேர்வு தேசிய சபையின் அடுத்த கூட்டத்தில் அங்கீகரிக்கப்படவேண்டும்.

ஆ. 1. நிர்வாகசபை செயலாளரால் கூட்டப்படும். மேலும் செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ் அதன் அதிகாரங்களைப் பயன்படுத்தி செயற்பாடுகள் மற்றும் கடமைகளைச் செய்யும்.

இ. நிர்வாக சபையின் எந்த உறுப்பினரும் விதி 15 இன் படி இணை தேர்வு செய்யப்பட்டவர்களைத் தவிர கட்சியின் முழுநேர ஊதியம் பெறும் ஊழியராக இருக்க முடியாது.

ஈ. நிர்வாகிகளைத் தவிர நிர்வாக சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு (2/3) க்கும் அதிகமான எண்ணிக்கை கூட்டங்களின் நடப்பெண் (quorum) ஆக இருக்க வேண்டும்.

உ. சம்பந்தப்பட்ட அனைத்து தொடர்புடைய பிரச்சினைகள் பற்றி நிர்வாக சபைக்கு பிரதம சட்ட ஆலோசகர் ஆலோசனை வழங்குவார்.

ஊ. நிர்வாக சபை ஆறு (06) மாதங்களுக்கு ஒருமுறை அல்லது தேவைப்பட்டால் அடிக்கடி அல்லது அதன் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் (2/3) குறையாத உறுப்பினர்களால் கூட்டு எழுத்துப்பூர்வ வேண்டுகோளின் பேரில் கூடலாம். அவ்வேண்டுகோள் கூட்டம் கூட்டப்பட வேண்டிய காரணத்தைக் கொண்ட அறிக்கையையும் உள்ளடக்க வேண்டும். அத்தகைய கூட்டம் வேண்டுகோள் பெறப்பட்ட இருபத்தி ஒரு (21) நாட்களுக்குள் நடத்தப்பட வேண்டும். அத்தகைய கூட்டத்தில் வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைத் தவிர வேறு எந்த விடயங்களையும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடாது.

எ. கட்சியை நிர்வகிக்கும் பொறுப்பு நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஏ. கட்சியின் வினைத்திறன் செயற்பாட்டிற்குத் தேவையான அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை நியமிக்கவும், அவர்களின் பணி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தீர்மானிக்கவும், யாப்பின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்ட முழுநேர நிர்வாகிகளின் செயல்பாடுகளை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தீர்மானிக்கவும், அவர்களின் நியமனம் தொடர்பாக அவசியமான ஏற்பாடுகளைச் செய்யவும் நிர்வாகச் சபைக்கு அதிகாரம் உண்டு.

ஐ. செயலாளர் மூலம் நிர்வாக சபை பின்வருவனயிட்டு நடவடிக்கை எடுக்கலாம்.

i. கட்சியின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தும் எந்தவொரு அதிகாரி அல்லது உறுப்பினருக்கு எதிராக அல்லது சூழ்நிலைகளுக்கேற்ப அத்தகைய நடவடிக்கை அவசியம் ஆகும்பொழுது சட்ட நடவடிக்கை எடுத்தல்.

ii. கட்சியின் எந்தவொரு திறமையற்ற அல்லது கீழ்படியாத ஊழியர்களையும் இடைநீக்கம் செய்தல் அல்லது வெளியேற்றல்.

iii. ஒழுக்காற்று குழுவின் விசாரணை, செயல்முறை மற்றும் அறிக்கைக்குப் பிறகு கட்சியின் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு முரணாகச் செயல்படும் உறுப்பினர்களை இடைநீக்கம் செய்தல் அல்லது வெளியேற்றுதல்.

ஒ. எந்தவொரு மாவட்டங்கள், மண்டலங்கள் இல்லது பிராந்தியங்களின் புத்தகங்கள் மற்றும் கணக்குகளை அல்லது கட்சி தொடர்பான எந்தவொரு கணக்கையும் எந்த நேரத்திலும் ஆய்வு செய்ய சிறப்பு அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வார்களை நியமிக்க நிர்வாக சபைக்கு அதிகாரம் உண்டு.

ஓ. எந்தவொரு நிர்வாக சபை உறுப்பினரும் தொடர்ச்சியாக மூன்று (3) கூட்டங்களுக்கு வராவிட்டால் அதற்கான திருப்திகரமான காரணங்கள் எழுத்து பூர்வமாக நிர்வாக சபைக்கு அனுப்பப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால், அவர் அமர்வில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

ஔ. நிர்வாக சபை கட்சியின் நிதி முதலீடு தொடர்பான நடைமுறை வழிமுறைகளை காப்பாளர்கள் செயல்படுத்தும்படி வழங்கும்.

## விதி 16 – முதன்மை, மாவட்ட மற்றும் பிராந்தியக் குழுக்கள்

அ. நிர்வாகசபையால் முதன்மை, மாவட்ட மற்றும் பிராந்தியக் குழுக்கள் அவ்வப்போது உருவாக்கப்படும் விதிகளின்படி அமைக்கப்படும். அத்தகைய குழுக்கள் நிர்வாகசபை கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலுக்கு உட்பட்டதாக இருக்கும்.

ஆ கட்சியின் விதி அல்லது விதிமுறைகளுக்கு முரணாக செயல்படும் முதன்மை, மாவட்ட மற்றும் பிராந்தியக் குழுக்களின் செயல்பாடுகள், கட்சியின் நற்பெயர் அல்லது புகழை பாதிக்கும் வகையில் இருப்பதாக நிர்வாகசபை திருப்தி அடைந்தால் அவற்றை கலைக்கும் அதிகாரம் நிர்வாகசபைக்கு உண்டு.

## விதி 17 – தலைவர், தவிசாளர் மற்றும் நிதிச்செயலாளர் ஆகியோரை தேர்ந்தெடுத்தல்

i. தலைவர், தவிசாளர் மற்றும் நிதிச்செயலாளர் ஆகியோர் தேசிய மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு அடுத்த தேசிய மாநாடு நடக்கும்வரை பதவியில் இருப்பார்கள்.

எந்தவொரு பத்து (10) பிரதிநிதிகளும் கூட்டாக **விதி 19 அ (ii)** இன் கீழ் தகுதி பெற்ற எந்தவொரு உறுப்பினரின் பெயரையும் கட்சியின் தலைவர், தவிசாளர் அல்லது நிதிச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட முன்மொழிந்து, அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன் செயலாளரை அடைய அனுப்பலாம்.

ii. முன்மொழியப்பட்ட வேட்பாளரின் எழுத்து பூர்வ ஒப்புதல் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன் செயலாளரால் பெறப்படாவிட்டால் அத்தகைய எந்த முன்மொழிவும் செல்லுபடியாகாது.

iii. தலைவர், தவிசாளர் அல்லது நிதிச்செயலாளர் பதவிக்கு ஒரே ஒரு (01) நபர் மட்டுமே முன்மொழியப்பட்டிருந்தால் அந்த நபர் நிர்வாகச் சபையால் உடனடியாக தலைவர், தவிசாளர் அல்லது நிதிச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார்.

iv. தலைவர், தவிசாளர் அல்லது நிதிச்செயலாளர் பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் முன்மொழியப்பட்டால் நிர்வாகசபையால் வகுத்த விதிமுறைகளின்படி தலைவர், தவிசாளர் அல்லது நிதிச்செயலாளர் பதவிக்கு பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்க ஏற்பாடுகளைச் செய்யும். மேலும் அதிக எண்ணிக்கையிலான வாக்குகளை பெறுபவரும், வாக்களிக்கப்பட்ட வாக்குகளில் அந்தந்த பதவிக்கு ஐம்பது சதவீதம் (50%) வாக்குகளுக்கு மேல் பெற்ற முன்மொழியப்பட்டவரையே தலைவர், தவிசாளர் அல்லது நிதிச்செயலாளராக அறிவிக்கும்.

v. தலைவர், தவிசாளர் அல்லது நிதிச்செயலாளர் மரணம் அல்லது இராஜினாமா போன்ற ஏதேனும் அவசர நிலை ஏற்பட்டால் புதிய தேர்தலுக்கான திகதியை தேசியசபை உடனடியாக நிர்ணயிக்கும். அத்தகைய நடைமுறை சாத்தியமற்றதாகக் கண்டறியப்பட்டால், தேசியசபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தலைவர், தவிசாளர் அல்லது நிதிச்செயலாளரை தேர்ந்தெடுப்பர். பதவி ஆண்டு காலத்தில் தலைவர், தவிசாளர் அல்லது நிதிச்செயலாளர் பதவி காலியாகிவிட்டால் அதற்காக சிறப்பாக கூட்டப்பட்ட தேசியசபை வெற்றிடத்தை நிரப்பும்.

**விதி 18 – செயலாளரின் தேர்தல்**

அ. செயலாளர் தேசிய மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு அடுத்த தேசிய மாநாடுவரை பதவியில் நீடிப்பார். எந்தவொரு பத்து (10) பிரதிநிதிகளும் கூட்டாக விதி 19 அ (ii) இன் கீழ் தகுதி பெற்ற எந்தவொரு உறுப்பினரின்

பெயரையும் கட்சியின் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட முன்மொழிந்து அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட திகதியிலோ அல்லது அதற்கு முன்பாகவோ செயலாளரை அடைய அனுப்பலாம்.

ஆ. முன்மொழியப்பட்ட வேட்பாளரின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட திகதியிலோ அல்லது அதற்கு முன்பாகவோ செயலாளரால் பெறப்படாவிட்டால் அத்தகைய எந்த முன்மொழிவும் செல்லுபடியாகாது. செயலாளர் பதவிக்கு ஒரே ஒரு (01) நபர் மட்டுமே முன்மொழியப்பட்டால் அவர் உடனடியாக நிர்வாகசபையால் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார்.

இ. செயலாளர்பதவிக்கு ஒன்றுக்கும் (01) மேற்பட்ட நபர்கள் முன்மொழியப்பட்டால், நிர்வாகசபை விதிகளின்படி பிரதிநிதிகளால் (Delegates)செயலாளர் பதவிக்கு ஒருவரை தேர்ந்தெடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும். மேலும் அதிக எண்ணிக்கையிலான மற்றும் ஐம்பது சதவீதத்திற்கு (50%) மேல் வாக்குகளை பெற்ற முன்மொழியப்பட்டவரையே செயலாளராக அறிவிக்கும்.

ஈ. செயலாளரின் மரணம் அல்லது இராஜினாமா போன்ற ஏதேனும் அவசர நிலை ஏற்பட்டால், தேசியசபை உடனடியாக புதிய தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கும். அத்தகைய நடைமுறை சாத்தியமற்றதாகக் கண்டறியப்பட்டால், தேசியசபைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் செயலாளரை தேர்ந்தெடுப்பார்கள். நடப்பு வருடத்தில் செயலாளர் பதவி காலியாகிவிட்டால், அதற்காகவே சிறப்பாக கூட்டப்பட்ட தேசியசபை அந்த வெற்றிடத்தை நிரப்பும்.

## விதி 19 – அலுவலக பொறுப்பாளர்கள்

அலுவலக பொறுப்பாளர்கள் பின்வருமாறு கொண்டிருப்பார்கள்.

- i தலைவர்
- ii தவிசாளர்
- iii செயலாளர்
- iv. நிதிச்செயலாளர்
- v. நிர்வாகச்சபையின் பிரதம சட்ட ஆலோசகர்
- vi. பிரதி தலைவர் - 2
- vii. உப தவிசாளர்
- viii பிரதி செயலாளர்
- ix அரசியல் அமைப்பாளர்

x உப தலைவர்கள் - 16

xi பிரதி அரசியல் அமைப்பாளர்

xii நிர்வாகச் செயலாளர்

xiii பிரதம கணக்காளர்

அ.

i. அலுவலக பொறுப்பாளர்கள் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய்க்கிழமை கூடவேண்டும்.

ii. மாவட்ட, மண்டல அல்லது பிராந்தியக்குழு அல்லது தேசிய சபை அல்லது கட்சியின் நிர்வாகசபை அங்கத்தினர் அல்லது உறுப்பினராகப் பதவி வகிக்க தேர்ந்தெடுக்கப்படுபவர், இருபத்தொரு (21) வயதுக்கு மேற்பட்டவராகவும் , நியமனத்திற்கு முந்தைய ஒரு வருடம் (01) கட்சியின் உறுப்பினராகவும் நிர்வாகச்சபையால் விலக்கு அளித்திருந்தால் தவிர மூன்று மாதங்களுக்கு மேல் சந்தா நிலுவையில் இல்லாதவராய் இருத்தல் அவசியமாகும்.

iii. நிர்வாகச்சபைக்கு போதுமான எண்ணிக்கையான நடப்பெண் (quorum) இருந்தால் இறப்பு அல்லது வேறுவிதமாக காலியாக உள்ள எந்தவொரு பதவியையும் நிரப்ப அதிகாரம் உண்டு.

iv. அ. அனைத்து அலுவலக பொறுப்பாளர்களும் செயலாளரின் ஒப்புதலுடனும், அனுமதியுடனும் செயல்படுவார்கள்.

ஆ. செயலாளர் தலைவருடன் இணைந்து கட்சியின் பொது நிர்வாகத்தை மேற்பார்வை செய்வார். அத்தோடு சம்பந்தப்பட்ட அனைவரும் இந்த விதிகளை கடைப்பிடிக்க ஆவண செய்வார்.

இ. தலைவர் தனது பதவி காலத்தில் பிரதிநிதிகள் (Delegates) நிர்வாக மற்றும் தேசியசபைகள் அனைத்து கூட்டங்களுக்கும் தலைமை தாங்குவார். மேலும் அத்தகைய கூட்டங்களை முறையாக நடத்துவதற்கு பொறுப்பாவார்.

ஈ. தலைவர் அல்லது தவிசாளர் அவர் இல்லாத நேரத்தில் பதிலுக்கு செயல்பட செயலாளரை நியமிப்பார். மேலும் செயலாளர் அத்தகைய தருணங்களில் தலைவர் அல்லது தவிசாளருடைய அனைத்து அதிகாரங்களையும் நடைமுறை படுத்துவார். செயலாளர் இல்லாத நிலையில் அவருக்காக செயல்பட நிர்வாகசபை உறுப்பினர் ஒருவரை பரிந்துரைப்பார்.

உ. நிதிச்செயலாளர் நிதி சம்பந்தமான கணக்கு புத்தகங்கள், பணம் மற்றும் எந்தவொரு வணிக பரிவர்த்தனைகளுக்கும் கட்சியின் சார்பில் பொறுப்பாவார். அவர் நிர்வாக சபையிலும், தேசிய மாநாட்டிலும் கட்சியின் அனைத்து நிதி பரிவர்த்தனைகளின் உண்மையான மற்றும் சரியான கணக்கை சமர்ப்பிக்க வேண்டும். அவர் கட்சியின் சார்பாக காசோலைகளில் கையொப்பமிடுவார். இது செயலாளரால் எதிர் கையொப்பமிடப்படும்.

ஊ. எந்தவொரு அலுவலக பொறுப்பாளரும் முப்பது (30) நாட்களுக்கு மேல் செயலாளரிடமிருந்து அனுமதி பெறாமல், பதவிக்கு வராமல் இருந்தால் தற்காலிக மாற்று ஒருவரை நியமிக்க செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

எ. தலைவருடன் கலந்தாலோசித்து கட்சியின் எந்தவொரு செயல்பாட்டையும் அவர் பொருத்தமாகக் கருதும் ஒருவருக்கு பகிர்ந்தளிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

ஏ. கட்சியின் தலைவர், தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் கட்சியின் அனைத்து குழுக்கள், சபைகள் மற்றும் கட்சியின் பிற அமைப்புக்களின் பதவி ரீதியான உறுப்பினர்களாவர்.

ஐ. போசகர் இல்லாத நிலையில், பொருத்தமான மூத்த உபதலைவர்களில் யாராவது ஒருவர் கட்சியின் தேசிய மாநாட்டில் தற்காலிகத் தலைவராக செயல்படுவார்.

ஒ. செயலாளர் எந்த வகையிலும் எழும் எந்தவொரு வெற்றிடத்தையும் நிரப்புவதற்கு தற்காலிக நியமனம் செய்யலாம்.

**விதி 20 – காப்பாளர்கள்**

அ. தலைவர், செயலாளர் மற்றும் நிதிச்செயலாளர் ஆகியோரைக் கொண்ட தேர்தெடுக்கப்பட்ட மூவர் (03) காப்பாளர்கள் ஆவர்.

ஆ.

i. கட்சியின் அனைத்து அசையும் அல்லது அசையா சொத்துக்களும் காப்பாளர்களின் கூட்டுப் பெயர்களில் இருக்கும். அவை நிர்வாகசபை தீர்மானம் மற்றும் வழிகாட்டலின்படி அவர்களால் கையாளப்படும்.

ii. அங்கீகரிக்கப்பட்ட நடப்புச் செலவுகளைத் தவிர மற்ற அனைத்து நிதிகளும் நிதிச்செயலாளரால் கட்சியின் பெயரில் நிர்வாகக்குழு முடிவு செய்யும் வங்கி அல்லது வங்கிகளில் வைப்புச் செய்யப்படும். மேலும் அத்தகைய கணக்குகளை நிதிச்செயலாளரும், செயலாளரும் இயக்குவர்.

iii. காப்பாளர்கள் எந்த நேரத்திலும் அல்லது அவ்வப்போது தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் கட்சிக்குச் சொந்தமான எந்தவொரு நிலம் மற்றும் கட்டிடங்களையும் கட்சி தொடர்பான எந்தவொரு நோக்கத்திற்காகவும் மற்றும் அவர்கள் அவ்வாறு செய்வது அவசியம் என்று கருதும் இடத்தில், வட்டி அல்லது பாதுகாப்பு மற்றும் திருப்பிச் செலுத்துதல் போன்ற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய அவை தகுதியானதாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் என்று கருதினால் மட்டுமே அடமானம் வைக்கலாம். எனினும் காப்பாளர்கள் நிர்வாகச் சபை முடிவுக்கும், வழிகாட்டலுக்கும் அமையவே செயல்படவேண்டும்.

இ. மரணம், இராஜினாமா, வங்குரோத்து, மனநோய், தண்டனை, நேர்மையின்மை அல்லது பன்னிரண்டு (12) மாதங்கள் தொடர்ந்து தீவில் இல்லாதது போன்ற சந்தர்ப்பங்களில் ஒரு காப்பாளர் பதவி காலியானதாக நிர்வாகச் சபையால் அறிவிக்கப்படும். மேலும் ஒப்புதலுக்காக அடுத்த தேசிய சபையில் இந்த விடயத்தை நிர்வாகசபை கொண்டு வரவேண்டும்.

ஈ தனது பதவியை விட்டு விலகும் எந்த ஒரு காப்பாளரும் தனது இராஜினாமாவை எழுத்துப்பூர்வமாக செயலாளரிடம் சமர்ப்பிக்கவேண்டும். அதன் நகல் தலைவர் மற்றும் தவிசாளருக்கு அனுப்பவேண்டும். செயலாளர் காப்பாளர் பதவியை விட்டு விலகும் பட்சத்தில் இராஜினாமாவை எழுத்துப்பூர்வமாக தலைவருக்கு வழங்கவேண்டும். அதன் நகல் தவிசாளருக்கும் அனுப்பவேண்டும்.

உ விதி 20 (இ) அல்லது (ஈ) இன் படி எந்த ஒரு காப்பாளர் பதவியும் வெற்றிடமாகிவிட்டால், அத்தகைய வெற்றிடம் அடுத்த தேசிய மாநாடு அல்லது சிறப்பு மாநாடுவரை நிர்வாகச் சபையால் தற்காலிகமாக நிரப்பப்படும்.

ஊ அனைத்து பத்திரங்கள், தலைப்பு ஆவணங்கள் மற்றும் கட்சியின் பணத்திற்கான பத்திரங்கள் காப்பாளர்களால் வைத்திருக்கப்படும். மேலும் அவர்கள் கட்சியின் செலவில் அவைகளின் பாதுகாப்பு, பத்திரப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மேலும் அவர்களின் பாத்திரத்திற்கு அல்லது அவர்களின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பத்திரங்கள் ஆவணங்கள் மற்றும் கடன் பத்திரங்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பாவார்கள். நிர்வாகசபை அல்லது பிரதிநிதிகளின் மாநாடு அல்லது கணக்காய்வாளர்களால் கோரப்படும்போது கணக்கு புத்தகங்களை அவர்களின் ஆய்வுக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

ஐ. பதவி விலகிய அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்ட எந்தவொரு காப்பாளரும் அத்தகைய ஆவணங்களை நிறைவேற்றுவதும், கட்சியின் பத்திரங்கள் சொத்துக்கள் மற்றும் நிதிகள் தொடர்பான தனது அனைத்து பொறுப்புக்களையும் ஏனைய காப்பாளர்களிடம் ஒப்படைக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதும் கடமையாகும்.

### விதி 21 – கணக்காய்வாளர்கள்

கட்சியின் கணக்காய்வு நோக்கத்திற்காக நிர்வாகசபையால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். மேலும் அத்தகைய கணக்காய்வு ஏப்ரல் 1 ஆம் திகதி தொடங்கி அடுத்த ஆண்டு மார்ச் இறுதிவரை காலவரையான நிதி ஆண்டு காலாவதியாகி மூன்று (03) மாதங்களுக்குள் முறையாக முடிக்கப்படவேண்டும்.

### விதி 22 - சம்பளங்கள் மற்றும் பிற கொடுப்பனவுகள்

அ. கட்சியின் ஊழியர்கள் மற்றும் முழுநேர அலுவலக பொறுப்பாளர்கள் சம்பளம் மற்றும் படிகளின் அளவு தேவைப்படும் போதெல்லாம் நிர்வாகசபையால் தீர்மானிக்கப்படும்.

ஆ. கட்சியின் வணிக பரிவர்த்தனையில் ஏற்படும் எந்தவொரு வேலைநேர இழப்புக்கும் கட்சியின் சார்பாக ஏற்படும் அனைத்து நியாயமான செலவுகளுக்கும், நிர்வாக சபையின் ஒப்புதலுக்கு உட்பட்டு அலுவலக பொறுப்பாளர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லது பிரதிநிதிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படலாம். அவர்கள் தங்கள் செலவுகளை அதற்குரிய பொறுத்தமான கட்டண கோரல்களுடன் (Voucher) நிர்வாக சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இ. கட்சியின் சார்பாக சேவை செய்யும் அலுவலக பொறுப்பாளர்களுக்கு கௌரவ ஊதியம் வழங்கப்படலாம். இதையிட்ட முடிவு மற்றும் தொகை நிர்வாக சபையால் தீர்மானிக்கப்படும்.

### விதி 23 - நிதிகள்

அ. கட்சியின் பெயரில் உள்ள அனைத்து நிதிகளையும் நிர்வாகசபை தீர்மானிக்கும் வங்கி அல்லது வங்கிகளில் பிரதம கணக்காளர் வைப்பு செய்ய வேண்டும்.

ஆ. கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி செயலாளரால் ஒரு நிதிக்குழு கட்சியின் கொள்கைகளை வகுக்கவும், நிதி விவகாரங்களை வழிநடத்தவும் நிறுவப்படும்.

i. தலைவர்
ii தவிசாளர்
iii செயலாளர்
iv. நிதிச்செயலாளர்
v. உப தலைவர் - நிர்வாகம்
vi. அரசியல் அமைப்பாளர்
vii. நிர்வாகச்செயலாளர்
viii. பிரதம கணக்காளர்

நிதிக்குழுவின் எந்தவொரு கூட்டத்திற்கும் நடப்பெண் (quorum) ஐந்து (05) உறுப்பினர்களாக இருக்க வேண்டும். இது ஆறு (06) மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும். நிதிச்செயலாளர் ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் நிதிக்குழுவில் வருவாய் மற்றும் செலவினங்களின் வருடாந்த மதிப்பீடுகளை சமர்ப்பிக்க வேண்டும். இது தொழிலாளர் நலன், தொழிலாளர் கல்வி, பெண்கள், இளைஞர்கள் சர்வதேச விவகாரங்கள், மே தினம், நினைவு விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளுக்கான அடையாள ஒதுக்கீடுகள் போன்ற திட்டங்களை பிரதிபலிக்கும் பாதீடுகள் (Budget) நிர்வாக சபையில் விவாதிக்கப்பட்டு அடுத்த தேசிய சபையில் அங்கீகரிக்கப்படும்.

இ. நடப்புக் கணக்கில் எடுக்கப்படும் தொகை நிர்வாக சபையால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக இருக்கக்கூடாது.

ஈ. கட்சியின் நிதி மேலே உள்ள யாப்பின் விதி 2 இன் நோக்கத்தை மேம்படுத்த மட்டுமே பயன்படுத்த வேண்டும். மேலும் நேரிலோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபரின் பேரில் நீதிமன்றத்தால் விதிக்கப்படும தண்டனை அல்லது கட்டளைப்படி அபராதம் கட்ட பயன்படுத்த முடியாது.

## விதி 24 – நிர்வாகக்குழு

காங்கிரஸின் அமைப்பு மற்றும் நிர்வாகக் கொள்கைகளை வகுக்க செயலாளரால் பின்வரும் நிர்வாகக்குழு அமைக்கப்படும்

i. தலைவர்
ii. தவிசாளர்
iii. செயலாளர்
iv. நிதிச்செயலாளர்
v. அரசியல் அமைப்பாளர்
vi. உப தலைவர் - நிர்வாகம்
vii. நிர்வாகச்செயலாளர்

நிர்வாகக்குழு ஆறு (06) மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும். நிர்வாகக் குழுவின் எந்தவொரு கூட்டத்திற்கும் நடப்பெண் (Quorum) ஐந்து (05) உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

## விதி 25 – மத்திய குழு

கட்சியின் அனைத்து அங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மத்தியகுழு இயங்கும். இது கட்சியின் அனைத்து தொடர்புடைய பிரச்சினைகள், பிரேரணைகள் மற்றும் செயல்திட்டங்கள் குறித்து தேசியசபை மற்றும் நிர்வாகச் சபைக்கு ஆலோசனை வழங்கும். இது நிர்வாகச் செயலாளரால் கூட்டப்பட்டு தலைமை தாங்கப்படும். தலைவர், தவிசாளர், செயலாளர், நிதிச்செயலாளர் , அரசியல் அமைப்பாளர், பதினாறு (16) உபதலைவர்கள் மற்றும் உதவிச்செயலாளர்கள், மத்திய குழுவின் பதவி ரீதியான உறுப்பினர்களாக இருப்பார்கள். இது ஆறு (06) மாதங்களுக்கு ஒரு முறையாவது அல்லது தேவைப்படும்போது கூடும். அத்தகைய கூட்டத்திற்கான நடப்பெண் (Quorum) இருபத்தைந்து(25) உறுப்பினர்கள் ஆகும்.

## விதி 26 – இணைப்பு அல்லது கூட்டமைப்பு

தேசியசபை கூட்டத்தில் மூன்றில் இரண்டு பங்கு (2/3) பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வேறு எந்த அரசியல் கட்சியுடனும் இணையவோ அல்லது கூட்டமைப்பு செய்யவோ கட்சிக்கு அதிகாரம் உண்டு.

## விதி 27 – விதிகளை மாற்றுதல்

தேசியசபை கூட்டத்தில் கலந்து கொண்ட மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு (2/3) பெரும்பாண்மையினரின் உரிய ஒப்புதல் இல்லாமல் எந்த விதியையும் உருவாக்கவோ, திருத்தவோ அல்லது ரத்து செய்யவோ முடியாது.

## விதி 28 – விளக்கம்

யாப்பில் அடங்காத விடயங்களையிட்டு நிர்வாக சபையால் யாப்பின் விதிகளின்படி வழங்கும் தீர்மானம் கடைசி முடிவாகும். எனினும் இது தேசிய சபையின் திருத்தத்திற்கு உட்பட்டதாகும்.

## விதி 29 – பின்னங்கள்

பின்னத்தின் மதிப்பை கருத்தில் கொள்ளும்போது, ஒரு பாதி (1/2) அல்லது அதற்கு மேற்பட்ட பகுதி ஒன்று (01) ஆகவும் ஒரு பாதிக்கு குறைவான பகுதி பூஜ்ஜியமாகவும் (00) கருதப்படும்.

## விதி 30 – கலைப்பு

அ. கட்சியின் கலைப்பு நோக்கத்திற்காக கூட்டப்பட்ட ஒரு சிறப்பு தேசிய மாநாட்டில் ஆறில் ஐந்து (5/6) கட்சியின் பிரதிநிதிகள் ஒப்புதலுடன் தவிர, கட்சியை தன்னிச்சையாக கலைக்க முடியாது.

ஆ. மேலே குறிப்பிட்டபடி கட்சி கலைக்கப்பட்டால், கட்சியின் சார்பாக அனைத்து சட்டபூர்வ கடன்களும், பொறுப்புக்களும் முழுமையாக கொடுத்து தீர்க்கப்பட்டு மீதமுள்ள நிதி உறுப்பினர்கள் பயனடைய அவர்களின் அங்கத்துவ வருடங்கள் விகிதத்திற்கேற்ப பிரிக்கப்படும்.

## விதி 31 – யாப்பு

தற்போதைக்கு அமுலில் உள்ள யாப்பின் நகலை செயலாளர் எந்தவொரு உறுப்பினருக்கும் ஆயிரம் ரூபா (ரூ.1000/-) செலுத்திப் பெற வகை செய்ய வேண்டும்.

விதி 32 – சிறப்பு ஏற்பாடுகள்

i. யாப்பின் விதிகளில் எழுத்து மூலமாக குறிப்பிடாத விடயங்களையிட்டு கூட்டத்தின் நடவடிக்கைகளை முறையாகவும், ஒழுங்காகவும் நடத்துவதற்கு ஏற்ப தனது விருப்புரிமையை பயன்படுத்துவதற்கு தலைவருக்கு அதிகாரம் உண்டு. செயலாளர் யாப்பு மற்றும் விதிகளின்கீழ் உள்ள அதிகாரங்களை நிர்வாகசபையின் ஆலோசனை மற்றும் இணக்கத்துடன் பயன்படுத்துவார்.

ii. கட்சியின் அனைத்து முடிவுகளும் செயலாளரின் இணக்கத்திற்கும், ஒப்புதலுக்கும் உட்படும்.

iii. நிர்வாகசபை இணக்கப்பாட்டுடன் செயலாளருக்கு மட்டுமே எந்தவொரு அரசு அல்லது அரசு சாரா அமைப்பு, கட்சி, கம்பனி, கூட்டாண்மை அல்லது தனிநபருடனும் கட்சியின் சார்பாக ஒப்பந்தம் செய்ய அதிகாரம் உண்டு.

iv. யாப்பில் வகுக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றி ஒழுக்காற்று குழுவால் நேர்மையான மற்றும் நியாயமான விசாரணை செயல்முறையை நடத்தாமல் எந்தவொரு உறுப்பினரையும் அவரது பதவியில் இருந்து அல்லது அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்பட முடியாது.

உறுதிப்படுத்தப்பட்டது

<u>ஒப்பம் :</u>

ஜீவன் தொண்டமான் பா.உ
செயலாளர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - அரசியல் பிரிவு

திகதி 07.04.2022

இணைப்பு - அ

# ஒப்பந்தம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியல் பிரிவு) இல. 72 ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 7 (முதற் தரப்பு) க்கும் எதிர்வரும்.....................திகதி நடக்கவுள்ள ...........................................................................................

பாராளுமன்ற / மாகாணசபை / பிரதேசசபை

தேர்தல் வேட்பாளர் ...........................................................................

பெயர் / விலாசம்

(இரண்டாம் தரப்பு) க்கும் இடையில் ஏற்படுத்திய ஒப்பந்தமானது

(1) முதற்தரப்பு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஆதலால் பொது அங்கத்தினர்கள் நலன் கருதி இரண்டாவது தரப்பு ...................க்கு தேர்ந்தெடுக்கப்படும் தருணத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியல் பிரிவு) அங்கத்துவம் விட்டு விலகவோ அல்லது கட்சி மாறவோ கூடாது.

(2) மேற்படி குறிப்பிட்ட தேர்தலில் இரண்டாவது தரப்பு முதல்தரப்பு அங்கத்துவத்திலிருந்து விலகவோ அல்லது வேறு எந்த கட்சிக்கு மாறவோ அல்லது சுயாதீனமாக செயல்படமாட்டேன் என்று ஏற்றுக் கொண்டு உறுதி அளிக்கிறது.

(3) முதல்தரப்பு கட்சியின் அங்கத்துவத்திலிருந்து இரண்டாம் தரப்பு விலகும் தருணத்தில் தான் வகித்த அரசியல் பதவியை முதலாம் தரப்பு கட்சியின் அங்கத்துவத்தில் விலகிய காலம் தொட்டு துறப்பேன் என்றும், அதற்கான அறிவிப்பை முதல் தரப்பு செயலாளருக்கு அறிவிப்பேன் என்றும் ஒப்பந்த ஒப்புதல் அளிக்கிறது.

(4) இரண்டாவது தரப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் பிரிவை பிரதிவாதியாக்கி எடுக்கப்படும் எந்த ஒரு சட்ட நடவடிக்கையினால் முதற்தரப்புக்கு ஏற்படும் செலவினங்களை இரண்டாம் தரப்பு முதல் தரப்புக்கு திருப்பி தருவதற்கு ஒப்பந்த ஒப்புதல் அளிக்கிறது.

<u>சாட்சிகள்</u> :

1.

2.

..........................                ............................

முதலாம் தரப்பு                 இரண்டாம் தரப்பு

(பதவி சகிதம்)

திகதி :